**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

## *18th ஏப்ரல் / April 2025 பெரிய வெள்ளி ஆராதனை ஒழுங்கு / Good Friday Service*

| | | |
|---|---|---|
| † | ***ஆராதனைக்கு அழைப்பு***<br>Call to Worship | ***திரு. ஆசீர்***<br>Mr. Asir |
| | ***இறைவணக்கப்பாடல்***<br>Introit | ***பாடகர் குழு***<br>Choir |
| | ***ஜெபம்***<br>Prayer | ***திரு. ஆசீர்***<br>Mr. Asir |
| † | ***தொடக்க பாடல்***<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

### என் அருள் நாதா, இயேசுவே

*1. என் அருள் நாதா, இயேசுவே!*
*சிலுவைக் காட்சி பார்க்கையில்,*
*பூலோக மேன்மை நஷ்டமே*
*என்றுணர்ந்தேன் என்*
*உள்ளத்தில்.*

*2. என் மீட்பர் சிலுவை அல்லால்*
*வேறெதை நான்*
*பாராட்டுவேன்?*
*சிற்றின்பம் யாவும் அதனால்*
*தகாததென்று தள்ளுவேன்.*

*3. கை, தலை, காலிலும், இதோ!*
*பேரன்பும் துன்பும் கலந்தே*
*பாய்ந்தோடும் காட்சிபோல்*
*உண்டோ?*
*முள் முடியும் ஒப்பற்றதே.*

*4. சராசரங்கள் அனைத்தும்*
*அவ்வன்புக்கு எம்மாத்திரம்!*
*என் ஜீவன் சுகம் செல்வமும்*
*என் நேசருக்குப் பாத்தியம்.*

| | | |
|---|---|---|
| † | ***மாறி மாறி வாசித்தல்***<br>Responsive Reading | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***வழி நடத்துபவர்*** *: தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.*

***சபையார் : ஏனெனில் கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்.***

***வழி நடத்துபவர்*** *: தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?*

***யாவரும் : ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. ஆமென்.***

| | | |
|---|---|---|
| † | ***தந்தை போற்றி***<br>Gloria Patri | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| | ***ஆயரின் ஜெபம்***<br>Pastoral Prayer | |
| | ***பரமண்டல ஜெபம்***<br>Lord’s Prayer | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| | ***சிறப்பு பாடல் 1***<br>Special Song 1 | ***பாடகர் குழு***<br>Choir |
| † | ***காணிக்கை பாடல்***<br>Offertory Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

### குருசினில் தொங்கிய குருதியும் வடிய

***குருசினில் தொங்கிய குருதியும் வடிய,***
***கொல்கதா மலைதனிலே - நம்***
***குருவேசு சுவாமி கொடுந் துயர், பாவி,***
***கொள்ளாய் கண் கொண்டு***

*1. சிரசினில் முள்முடி உறுத்திட, அறைந்தே*
*சிலுவையில் சேர்த்தையோ! - தீயர்*
*திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்,*
*சேனைத்திரள் சூழ*

*2. பாதகர் நடுவில் பாவியினேசன்*
*பாதகன்போல் தொங்க, யூத*
*பாதகர் பரிகாசங்கள் பண்ணிப்*
*படுத்திய கொடுமைதனை*

*3. சந்திரசூரிய சகல வான் சேனைகள்*
*சகியாமல் நாணுதையோ! - தேவ*
*சுந்தர மைந்த னுயிர் விடுகாட்சியால்*
*துடிக்கா நெஞ்சுண்டே?*

*4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த*
*இறைவன் விலாவதிலே, - அவர்*
*திட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும்*
*திறந்தூற்றோடுது, பார்*

*5. எருசலே மாதே, மறுகி நியழுது*
*ஏங்கிப் புலம்பலையோ? - நின்*
*எருசலையதிபன் இள மணவாளன்*
*எடுத்த கோல மிதோ?*

**பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
✝ Doxology — Congregation

**சிறப்பு பாடல் 2** — **பாடகர் குழு**
Special Song 2 — Choir

**திருமறைப் பாடம்** — **திரு. மகேஸ்வரன்**
✝ **லூக்கா 23 : 44 - 56** — Mr. Mageshwaran
Scripture Reading
Luke 23 : 44 – 56

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

**முடிவுப் பாடல்** — **சபையார் இணைந்து**
✝ Closing Song — Congregation

**<u>அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே</u>**

**அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே**
**சிறுமை அடைந்தே தொங்குறார்**

*1. மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்*
*கொடுமை குருசை தெரிந்தெடுத்தாரே*
*மாய லோகத்தோடழியாது யான்*
*தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே.*

*2. அழகு மில்லை சௌந்தரிய மில்லை*
*அந்தக் கேடுற்கும் எந்தனை மீட்க*
*பல நிந்தைகள் சுமந்தாலும்*
*பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே.*

*3. முள்ளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்*
*கால்கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்*
*குருதி வடிந்தவர் தொங்குறார்*
*வருந்தி மடிவோரையும் மீட்டிடவே*

*4. அதிசயம் இது இயேசுவின் சிநேகம்*
*அதிலும் இன்பம் அன்பரின் தியானம்*
*அதையெண்ணியே நிதம் வாழுவேன்*
*அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடவே*

*5. சிலுவை காட்சியைக் கண்டு முன்னேறி*
*சேவை புரிவேன் ஜீவனும் வைத்தே*
*என்னைச் சேர்த்திட வருவேன் என்றார்*
*என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன்*

**முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
✝ Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

**ஆசீர்வாதப் பாடல்** — **சபையார் இணைந்து**
✝ Benediction Song — Congregation

***கர்த்தர் தந்த ஈவுக்காக***
***என்றென்றைக்கும் தோத்திரம்!***
***விண்ணோர் மண்ணோர் கூட்டமாக***
***பாடுவார் சங்கீர்த்தனம்.***
***மீட்கப்பட்ட யாவராலும்***
***ஏக தேவரீருக்கே***
***ஆரவாரமாய் என்றைக்கும்***
***தோத்திரம் உண்டாகவே!***

✝ ***சபையார் நிற்கவும்*** **/ Indicates Congregation standing**